முருகப்பெருமான் துணை

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.09.2023**, திங்கட்கிழமை

1. வரம் தரும் ஞான குருவே
வளம்பெற உலகை காக்க
அறம் தரும் அரங்க ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளிதிங்கள்
குறைவிலா இருபானை திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 25 ம் நாள், 11.09.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க குலசேகர ஆழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி ஞான வழி
ஞானதேசிகன் காட்டும் வழி
நம்பிக்கை வைத்து உலகோர் வர
4. வருகவே எங்கும் மாற்றம்
வளரும் வையகம் தன்னில்
தருகின்ற உயர் குணங்களாகி
தரும சேவை எங்கும் பெருகி
5. பெருகியே கலியின் சிக்கலான
பேராசை சுயநலம் ஆகிய
சிறுமையான நிலைகள் விலகி
செப்பிடுவேன் ஞானவான்களாக
6. ஆகவே மக்களிடை நற்குணம்
அளவிலா நற்பண்பு கூடி
மிகைபட ஞானவான்கள் படை
முருகப் பெருமானை வணங்கி

7. வணங்கியே அரங்க மகானின்
வழிதனில் அணிவகுத்துமே
இணங்கி மேலவர்களும் அருள
எங்கும் மாற்றம் காண்கும்
8. காண்கவே சகமனிதர்களை
கலியின் கொடுமைகள் வழி
மேன்மைபடா சமமாய் நடத்தா
மேல்கீழ் எனும் வகுப்புவாத
9. வகுப்புவாத கொடுமைப்படுத்தி
வறுமை கோட்டில் உழல விடும்
வகுப்புவாத இன்னல்கள்தனை
வதையை முற்றிலும் விரட்டி
10. விரட்டி எவ்வுயிரும் தன்னுயிராய்
வேலவன் ஆசிபட உணரும்
தரணியில் மதித்துப் போற்றும்
தக்க உயர்குண மக்களாக மாறி
11. மாறியே அரங்கன் சன்மார்க்கம்
மகத்துவமுள ஞான உலகு படைத்து
ஆறுதலாக ஞானயுகம் ஆக்கும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—